# <u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>

## O.S. No. 185/2024

Deposition of **<u>P.W.-1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench clerk of this court, on 25.09.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : விஜயா | Husband Name | : சக்திவேல் |
| Village | : தம்மம்பட்டி | Taluk | : கெங்கவல்லி |
| Calling | : | Age | : 46 |

துவக்க நேரம் : 01.59 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பபட்டார்.

**<u>வாதி தரப்பில் முதல் விசாரணை</u>** : நான் இவ்வழக்கில் வாதி. வாதி தரப்பு 1-ம் சாட்சி. நான் என்னுடைய முதல் விசாரணைக்கான நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் யாவும் நான் சொல்லியவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் உண்மைதான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| **வ.எண்.** | **ஆவணம்** | **வகைப்பாடு** | **தன்மை** |
|---|---|---|---|
| 1. | கடந்த 13.12.2022 தேதியிட்ட கெங்கவல்லி வட்டாட்சியர் வழங்கிய குறிப்பாணை ந.க.எண்.5160/2022/ஆ 2 அசல் | அசல் | **வா.த.சா.ஆ. 1** |
| 2. | எனது பெயரிலுள்ள குடும்ப அட்டை (அசலுடன் ஒப்பீட்டு பார்க்கப்பட்டது) | நகல் | **வா.த.சா.ஆ. 2** |
| 3. | எனது கணவரின் வாக்காளர் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீட்டு பார்க்கப்பட்டது) | நகல் | **வா.த.சா.ஆ. 3** |
| 4. | எனக்கும், எனது கணவருக்கும் கடந்த 30.08.1990-ல் நடந்த திருமணத்திற்கான திருமண பத்திரிக்கை (அசலுடன் ஒப்பீட்டு பார்க்கப்பட்டது) | நகல் | **வா.த.சா.ஆ. 4** |

| | | | |
|---|---|---|---|
| 5 | எனது பெயரிலுள்ள ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீட்டு பார்க்கப்பட்டது) | நகல் | **வா.த.சா.ஆ. 5** |
| 6 | கடந்த 09.04.1996 தேதியிட்ட எனது பெயரிலும், எனது கணவர் பெயரிலும் உள்ள கிரையப்பத்திரம் | சான்றிட்ட நகல் | **வா.த.சா.ஆ. 6** |
| 7 | கடந்த 21.08.2024 தேதியிட்ட தம்மம்பட்டி காவல்நிலையத்தில் நான் கொடுத்த புகார் | கைநகல் | **வா.த.சா.ஆ. 7** |
| 8 | 21.08.2024 தேதியிட்ட தம்மம்பட்டி காவல் நிலையத்தில் எனது புகாரை பெற்றுக்கொண்டதற்கான மனு ரசீது எண்.270/2024-ற்கான | அசல் | **வா.த.சா.ஆ. 8** |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

1) எனது கணவர் மது போதைக்கு அடிமையாகி மனநிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக்கொண்டதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கடந்த 2006-ம் ஆண்டு எனது கணவர் காணாமல் போய்விட்டதாக கூறியுள்ள நிலையில் அப்பொழுது அது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன், ஆனால் அது தொடர்பான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது தவறு என்றாலும் கடநத் 2006-ல் எனது கணவர் காணாமல் போனதற்கான எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும் தற்பொழுது வழக்கிற்காக புகார் கொடுக்கப்பட்டு ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவர் காணாமல் போன ஆண்டிலிருந்து என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொண்டேன் என்று எனது தாவாவில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல.

2) எனது கணவர் காணாமல் போனது தொடர்பாக அனைத்து ஆவணங்கள் தாக்கல் செய்து வழக்கை நிரூபணம் செய்வது எனது கடமை என்றால் சரிதான். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். எனது வழக்கை நீதிமன்றத்தில் நிரூபணம்செய்யும் பட்சத்தில் பிரதிவாதிகள் நான் தாவாவில் கோரியுள்ளவாறு சான்று வழங்க தயாராக உள்ளார் என்றால் எனது தரப்பில் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன், தாவாவில் கோரியவாறு பரிகாரம் கேட்டுள்ளேன்.

வாதி தரப்பில் மறுவிசாரணை - இல்லை

முடிவு நேரம்:  02.14 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/-D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala -  O.S. No.185/2024, Dt.25.09.2025.